
அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

# வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

துன்முகி ஆண்டு மாசி - பங்குனி ஏப்ரல் 2017 முரசு 10 ஒலி 118



பிரதி ஒன்றுக்கு ரூ. 10/- ஆண்டு சந்தா ரூ. 120/-

சிறுவர் சிறுமியர்களுக்கான

# கோடை விடுமுறை சிறப்பு பயிற்சி முகாம்



இயற்கைச் சூழலில்

ஏழு நாட்கள்...



நாள்:
மே மாதம்
14 முதல் 21 வரை

இடம்: வள்ளலார் சன்மார்க்க சங்கம்,
வாயுலிங்கம் எதிரில், திருவண்ணாமலை.

## இந்த பயிற்சி முகாமில்...

- யோகாசனம்
- பாராயணம்
- ஜீவகாருண்யம்
- உணவுமுறை
- ஒழுக்கநெறி பாடம்
- ஓவியப் பயிற்சி
- நினைவாற்றல் பயிற்சி
- மனோ சக்திக்கான தியான நுட்பங்கள்

போன்ற சிறப்பு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## பெற்றோர்கள் கவனத்திற்கு...

1. பயிற்சியில் கலந்துகொள்ளும் குழந்தைகளை பெற்றோர்கள் மே 14ம் தேதி ஞாயிறு இரவிற்குள் அழைத்துவந்து விட வேண்டும்.
2. 7 முதல் 13 வயதிற்குட்பட்ட குழந்தைகள் மட்டுமே அனுமதி.
2. யோகா செய்வதற்கும், படுப்பதற்கும் 2 பெட்ஷீட் எடுத்து வரவும்
3. குறிப்பு எடுக்க நோட்டு. பேனா எடுத்து வரவும்.
4. பெற்றோர்கள் குழந்தைகளுடன் தங்க அனுமதி இல்லை.
5. பெற்றோர்கள் மே 20 சனிக்கிழமை இரவு வந்துவிடவேண்டும்.

**பயிற்சிக்கான நன்கொடை ரூ.2000/-**

வங்கிக் கணக்கிற்கு பக்கம் எண் 26ஐப் பார்க்கவும்.

முதலில் பதிவுசெய்யும் 20 நபர்களுக்கு மட்டுமே அனுமதி

**முன்பதிவிற்கு: 88835 90659, 98654 39998**



# திருச்செவிக்கு விண்ணப்பம்

இறைவா! அமைதி நிறைந்த திருவருட்கடலாய் உள்ளவனே! அமுதே! தேனே! தில்லை அம்பலத்தில் எழுந்தருளியுள்ள என் ஞான குருவே! நன்னிலை ஒன்றும் நானறியேன். அவ்வாறு அறிந்து ஞான நலம் பெற்ற பெரியவர்கள் மேற்கொள்ளும் நெறிகளையும் நான் அறியேன். ஆனால், எனக்கு உனது நட்பைத் தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை மட்டும் நன்கறிவேன். பிற மக்களோ, தேவர்களோ துணையாவார்கள் என்று நான் கனவிலும் நினைத்தது இல்லை. நான் நல்ல கல்வி கற்றவனில்லை. நீ என் மனத்தில் எழுந்தருளி அறிய வேண்டியனவற்றை அறிவித்தாய். உன் அடிமையாகிய எனக்கு நீதான் மேலும் காட்டி அருளவேண்டும்.

ஒளியாய், அதன் உள் ஒளியாய், அவ்வுள்ளொளிக்கும் உள்ளொளியாய், ஒளிக்கெல்லாம் காரணமான மூல ஒளியாய் விளங்குபவனே! அவ்வொளியெலாம் பரவும் வெளியாய், அவ்வெளிக்கும் மேல் வெளியாய், அம்மேல் வெளிக்கும் மேல் விளங்கும் பெரிய வெளியாய், அதற்கு மேலும் விளங்கும் ஓர் வெளியாய் விளங்குபவனே! அருளாகியவனே! இவையெலாம் அல்லாதவனாய், பூரணமாய், தனித்ததாய், எல்லாமாய் விளங்குகின்றவனே! ஞானசபைத் தலைவனே! உன் இயல்பை எவ்வாறு கூறுவது?

அருளாளா! நான் வேண்டுதல் கேட்டு அருள்புரிக! அணுவளவும் சினமோ, காமமோ என்னை அண்டாது காத்தருளல் வேண்டும். ஞானசபைக் கூத்தனே! அறியாமை இருளில் மூழ்கிக் கிடக்கும் உலகத்தவர் எல்லோரும் அவ்விருளைவிட்டு நீங்கி உன்னை வாழ்த்துபவராக, துதிப்பவராக மாற்றி அருள்க! என்னை பின்தொடரும் எல்லா உயிர்களையும் சுகமாய் வாழச் செய்திடுக. எல்லா உயிர்களும் இன்புற்று வாழ வேண்டும். மெய்ப் பொருளாகிய உன்னுடைய திருவடிவிலே நானும் நீயும் சேர்ந்து கலந்து ஒன்றாகி உயர்தலும் வேண்டுமாய் அருள் புரிக!

# குறள் மொழி காட்டும் வழி

தீவினையச்சம்
(அதிகாரம் 21)

மனிதன் அறிவைத் தேடவும் செயல்படவும் இயற்கை அளித்துள்ள கருவிகள் பொதுவாக இருவகைப்படும். ஒன்று வெளிப்படையாகக் காட்சிக்கு உட்படுபவை, அவை புறக் கருவிகள். இரண்டு காட்சிக்கு வெளிப்படாமல் அகத்தில் மறைந்திருப்பவை அகக் கருவிகள் ஆகும். அறிவுப் பொறிகள் ஐந்து மற்றும் செயற் பொறிகள் ஐந்து ஆகிய பத்து பொறிகளும் புறக் கருவிகள். மனம், புத்தி, சித்தம், அகங்காரம் ஆகிய நான்கும் அகப்பொறிகள் ஆகும். அகக் கருவிகள் நான்கையும் வெவ்வேறு உறுப்புகளாகக் கொள்வதைக் காட்டிலும் அவற்றை மனம் என்ற ஒன்றின் வெவ்வேறு பரிமாணங்களாகக் கொள்வதே அறிவதற்கும் ஆய்ந்து தெளிவதற்கும் சிறப்பெனப்படுகிறது.

விருப்பஞ்சார் செயல்கள் (இச்சை செயல்கள்) விருப்பஞ்சாரா செயல்கள் (அனிச்சை செயல்கள்) எனச் செயல்களை இருவகைப் படுத்துவர். விருப்பஞ்சாராச் செயல்களான உடலின் உள்ளுறுப்புகளின் இயக்கம் மற்றும் பழக்கமாகிவிட்ட உடல் அசைவுகள் சில நன்று – தீது, சரி – தவறு என்ற மதிப்பீடுகட்குள் வருவதில்லை. இச்செயல்களைத் திட்டமிட்டுத் தன் விருப்பு, வெறுப்புகளைப் புகுத்தி மனிதன் செய்வதில்லை. ஆனால், விருப்பஞ்சார் செயல்களை மனித மனம் திட்டமிட்டு அவற்றின் விளைவுகளையும் ஆய்ந்தறிந்து வெளிப்படுத்துகிறது. எனவே, இவை சரி – தவறு; நன்று – தீது என்ற மதிப்பீடுகட்கு உட்படுகின்றன.

ஒருவரின் அச்சத்தாலோ அச்சமின்மையாலோ அவரின் விருப்பஞ்சாராச் செயல்களைக் கட்டுப்படுத்தவோ மாற்றவோ இயலாது. ஆனால், ஒருவரின் அச்சமும் அச்சமின்மையும் அவரின் விருப்பஞ்சார் செயல்களோடு நேரிடையாகத் தொடர்புடையன ஆகின்றன. அச்ச உணர்வு ஒருவரின் விருப்பஞ்சார் செயல்களைக் கட்டுப்படுத்தும். அச்சமின்மை விருப்பஞ்சார் செயல்களின் நன்மை – தீமைகளை எண்ணிப் பாராமல் அவற்றைக் கட்டவிழ்த்து விடும்.

அச்சம் என்பது அகவுணர்வு. மனிதனின் அனைத்துச் செயல்கட்கும் மனத்தில் தோன்றும் எண்ணங்களும் ஊற்றெடுக்கும் உணர்வுகளும் மூலகாரணங்கள் என்கிறது உள்ளத்தியல் ஆய்வுகள். மனவுணர்கள் புத்தி, சித்தம், அகங்காரம் என்ற படிகளைக் கடந்து செயல்களாக, வினைகளாக வெளிப்படுகின்றன. **தீவினை பற்றிய எண்ணம் மனத்தில் தோன்றும் நிலையிலேயே அச்சவுணர்வு மேலிட்டு அதனை அழித்திட வேண்டும்.** தீய எண்ணம் புத்தி, சித்தம், அகங்காரம் என்ற படிகட்குக் கூடச் செல்லக் கூடாது என்பதையே தீவினையச்சம் என்ற தலைப்பு உணர்த்துகிறது.

*தீவினை என்பது செருக்கின் வெளிப்பாடு. ஆசை, சினம், பொறாமை, பகை போன்ற உணர்வுகள் மனத்தின் அடித்தளத்திலிருந்து எழுகின்றன. இவ்வுணர்வுகளை அடக்கி ஒடுக்கும் பக்குவமும் பழக்கமும் இல்லாத மனத்தில் உணர்வுகள் வலுப்பெற்று எண்ணங்களாகி வெளிப்படும் போது தீவினைகளாகின்றன. அச்சம் அற்றுப் போய் ஆணவம் மிக்கவரிடமிருந்தே தீவினைகள் வெளிப்படுகின்றன. தானே எல்லாம் வல்லவன்; வலிமையிலும் அதிகாரத்திலும் தனக்கு ஒத்தாரும் மிக்காரும் எவரும் இலர் என்ற செருக்கே ஒருவனுடைய தீவினைகட்கெல்லாம் காரணம் ஆகிறது.*

*வள்ளுவர் தீவினையைச் செருக்கின் வெளிப்பாடு என்கிறார். தனிமனித ஒழுக்கத்தையும், சமூக ஒழுங்கையும் விரும்புகின்றவர்கள் தீவினை செய்ய அஞ்சுவார்கள். ஒழுக்கக் கேடுகள் மலிந்து விட்டால் தனிமனித வாழ்வும், சமூக அமைதியும் கெட்டு விடும் என்ற அச்சம் அவர்களின் தீய உணர்வுகளை உணர்வு நிலையிலேயே ஒடுக்கி அழித்துவிடும். தீய வினைகளாக அவை வெளிப்படா. எனவே, ஒழுக்கக் கேடுகட்குச் சற்றும் அஞ்சாதவர்கள் தீவினையாளர்களாகவும்; அஞ்சுகின்றவர்கள் எல்லோராலும் விரும்பப்படுகின்ற நல்லவர்களாகவும் கருதப்படுவர் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. (குறள்: 201)*

*எது நன்று, எது தீது என்ற வினாவிற்கு ஓரிரு சொற்களால் அல்லது ஒரு சில சொற்றொடர்களால் விடை கூற இயலாது. அறவியல் சார்ந்த இவ்வினாவிற்கு விடை காண நெடிய விவாதம் தேவைப்படும். தான் துன்புற்றாலும் பிறர் மகிழச் செயல்படுவது நல்வினை; ஒருவன் தான் மகிழப் பிறர் துன்புற வேண்டும் அல்லது பிறரைத் துன்புறுத்த வேண்டும் எனச் செயல்படுவது தீவினை. தற்போதைக்கு இதனை ஒரு மிகச் சுருக்கமான விளக்கமாகக் கொள்ளலாம். இவ்வடிப்படையில் தீவினை என்ற சொல்லாடலை வள்ளுவர் இங்கு கையாள்கிறார் எனலாம்.*

*தீய செயல்கள் தீயைக் காட்டிலும் கொடியவை என்கிறார் வள்ளுவர். தீயானது தன்னகத்து அகப்படுவனவற்றை எரித்துச் சாம்பலாக்கும் கொடுமையை மட்டுமே செய்வதில்லை. பல சூழல்களில் பல வகைகளில் நல்லனவற்றுக்கும் தீ பயன்படுகிறது. ஆனால் தீய செயல்கள் எக்காலத்தும் எல்லாவிடத்தும் தீங்கினை மட்டுமே விளைவிக்கும்; தீவினைகள் ஒருபோதும் ஓரிடத்தும் நன்மை பயவா. எனவேதான், 'தீயவை தீயவே' என தேற்ற ஏகாரமிட்டுச் சுட்டுகிறார் வள்ளுவர். தீயைக் காட்டிலும் தீவினைகள் கொடியன என்றும் அவற்றைச் செய்ய மனித மனம் அஞ்ச வேண்டும் என்றும் வள்ளுவர் வலியுறுத்துகிறார். (குறள்: 202)*

*எது சரி, எது தவறு, எது நன்று, எது தீது என்ற தெளிவைத் தந்து தவற்றையும் தீதையும் புறந்தள்ளிச் சரியானவற்றிலும் நன்மை பயப்பனவற்றிலும் மனிதனைப் பயணிக்கச் செய்வது அறிவின் பயனாகும். இத்தகைய அறிவு சார்ந்ததும் அறிவுக்கு ஏற்புடையதுமான செயல்கள் பற்பல உள. இவற்றுள், தனக்குப் பகையானவர்க்கும் தன் கருத்திற்கு முரண்படுவோர்க்குங்கூட ஒருவன் தீமை செய்யாதிருப்பதே அறிவார்ந்த செயல்கள் அனைத்திலும் தலையானதும், சிறப்பானதும் ஆகும். நண்பர்க்கு நன்மை செய்வதும் பகைவருக்கு தீங்கு செய்வதும் விலங்கு மன இயல்பு. வாய்ப்பும் வலிமையும் தனக்கிருந்த போதும் தன் பகைவர்க்கும் தீமை செய்யாமல் ஒழுகுவது மனித மனச் சிறப்பியல்பு. (குறள் 203)* **அறிவின் பயன் ஒழுக்கம்** *என்பதே வள்ளுவரின் முடிபாகும்.*

*வாய் தவறிக் கடுஞ்சொல் உதிர்ப்பதும், கை தவறிக் கேடு செய்வதும் ஆகிய செயல்கள் ஓரளவேனும் மன்னிக்கப்படும் தகுதி உடையவை. ஆனால் மறந்துங்கூட பிறர்க்குக் கேடு செய்ய ஒருவன் தன் மனத்தளவிலும் எண்ணக்கூடாது. அத்தகைய எண்ணத்திற்கு மன்னிப்பே கிடையாது.* **மனத்துக்கண் மாசிலன் ஆதல் அறம்** *என வள்ளுவர் பிறிதோர் இடத்தில் கூறியுள்ளமை ஈண்டு நினைக்கத் தக்கது. மறந்தும், நினைவின்றியுங்கூட ஒருவன் பிறருக்குக் கேடு நினைத்தால் அதன் எதிர் வினையிலிருந்து அவன் தப்ப இயலாது. தீயவை தீயவற்றையே விளைவிக்கும் என்ற அறவியல் விதிப்படி கேடு நினைத்தவன் கேடுறுவான். தான் செய்த தீங்கால் தனக்கு வரும் கேடுகளை ஒருவன் தனக்குள்ள உலகியல் வலிமைகளால் தடுக்கவும் தவிர்க்கவும் முற்படக் கூடும். அறம் எனும் இறைமையின் முன் பிற வலிமைகள் நில்லாதொழியும் என்ற உண்மையை மறக்கக் கூடாது. அறமானது தீவினை செய்தவனைத் தீவினையிலேயே ஆழ்த்திவிடுவது உறுதி என்கிறார் வள்ளுவப் பெருந்தகை. (குறள்: 204)*

*சிலர் தம் வறுமை, ஏழ்மை, இயலாமை, இல்லாமை ஆகியவற்றின் உந்தலால் பொய் கூறல், களவாடல், கூலிப்படை என்ற பெயரில் கொலை செய்தல் போன்ற தீங்குகளைச் செய்கின்றனர். காரணம் காட்டிப் பிறருக்குச் செய்த கேடுகளை நியாயப்படுத்துவது எவ்வகையிலும் அறமாகாது. எந்நிலையிலும் எதற்காகவும் பிறருக்குக் கேடு செய்யாதிருப்பதே அறமும், தனிமனித ஒழுக்கமும் ஆகும். வறுமையின் காரணமாகப் பிறர்க்குக் கேடு செய்து பெறப்படும் பொருள் நிலைக்காது. தீதின்றி ஈட்டிய பொருளே நிலைத்த பயனைத் தரும். கேடு செய்து ஈட்டிய பொருளால் ஒருவன் முன்னிலும் வறியவனாகவே ஆவான். அவன் எக்காலத்தும் வளமையின் பயனைத் துய்க்கவே முடியாது. (குறள்: 205)*

*தீமைகளே நிறைந்ததாகவோ நன்மைகளே நிறைந்ததாகவோ மனித வாழ்க்கை அமைவதில்லை. இரண்டும் கலந்திருப்பதே இயல்பான மனித வாழ்க்கை என்பது உலகியல் உண்மை. இயன்ற அளவு தீமைகளைக் குறைத்து நன்மைகளைப் பெருக்கி வாழ முற்படுவது மனித வாழ்வின் சிறப்பு என்கின்றனர் அறவியல் அறிஞர்கள். துன்பத்தை வரவேற்போர் எவருமிலர். நிகழ்காலத்திலும் எதிர் காலத்திலும் தன்னை வருத்தித் துன்புறுத்தும் கேடுகள் நேரக் கூடாது என்றே ஒவ்வொரு மனிதனும் விரும்புகிறான். விரும்பினால் மட்டும் போதுமா? அதற்கேற்ப அவன் செயல்படவும் வேண்டும்.*

*பிறர்க்குத் தீங்கு செய்யாமலும், பிறர்தம் உணர்வையும் உடலையும் துன்புறுத்தாமலும் வாழ்ந்தால் ஒருவனை துன்பம் வலிய வந்து பற்றாது என்கிறது குறள் மொழி. (குறள்: 206) எவரையும் துன்புறுத்தாத ஒருவன் துன்பத்தில் உழல்கிறான் எனில் அவன் என்றோ எங்கோ எவரையோ துன்புறுத்தியுள்ளான் என்றே அனுமானிக்க நேர்கிறது.* **'பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா பிற்பகல் தாமே வரும்'** *எனப் பிறிதோர் இடத்திலும் (குறள்: 319) வள்ளுவர் கூறியுள்ளமை நோக்கத் தக்கது.*

*ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்க்கைப் பயணத்தில் இயல்பாகவே பலவகைப் பகைகளை எதிர் கொள்ள நேர்கிறது. பகையின் இயல்பும் எண்ணிக்கையும் மனிதனுக்கு மனிதன் வேறுபடக்கூடும். ஆனால், பகையே இல்லாத மனித வாழ்க்கை அரிதினும் அரியது என்பதே உண்மை. ஒருவன் தன் மனத் திண்மையாலும், உடல் வன்மையாலும் எவ்வளவு பெரிய பகையையும் எதிர்கொண்டு, வெற்றிகண்டு தப்பக் கூடும். ஆனால், ஒருவன் தான் செய்த தீவினை எனும் பகையிடமிருந்து எவ்வகையாலும் தப்பவே இயலாது. எவ்விடம் சென்றாலும் எவர்துணை தேடினாலும் எவ்வகைக் காப்பு கொண்டாலும் தீவினையாகிய பகை அவனைப் பின்தொடர்ந்து வருத்தும்; அழிக்கும் என்பதுறுதி. (குறள்: 207)* **'ஊழ்வினை உறுத்து வந்து ஊட்டும்'** *என்கிறது சிலப்பதிகாரம்.*

*தீவினை செய்தவன் எங்கு சென்றாலும் அவனைத் தீங்குகள் விடாது தொடர்ந்து துன்புறுத்தும் என்பது அறவியல் விதி. இவ்விதியை ஓர் உவமையின் மூலம் எளிமையாக்கிக் கூறுகிறார் வள்ளுவப் பெருந்தகை. ஒருவனிடமிருந்து அவனுடைய நிழலைப் பிரிக்க இயலாது. அவன் எவ்விடம் சென்றாலும் அவனைத் தொடர்ந்தே அவன் நிழலும் செல்லும் என்பது இயற்கை நியதி. இவ்வாறே தீமை செய்தவனை ஒருபோதும் விட்டு அகலாமல் அவனை கேடு சூழ்ந்து துன்புறுத்தும் என்கிறது குறள் அறநெறி. (குறள்: 208)*

*பொருள் திணிந்த ஒரு கருத்தை எளிய உவமை அழகாகவும் ஆழமாகவும் உணர்த்துகிறது.*

ஒரு மனிதன் நலமுடனும், பொருள் வளமுடனும் வாழ்ந்து பிறவிப் பயனை அடையப் பதினாறு வகையான பேறுகளை, செல்வங்களைப் பெற வேண்டும் என்றும் இச்செல்வங்களைப் பெற்று குறையேதுமின்றி நிறைவாக வாழ்வதற்கான வழிவகைகளைப் பற்றியும் அபிராமி அந்தாதிப் பதிகம் குறிப்பால் உணர்த்துகிறது. குறள்நெறியோ என்ன செய்யக் கூடாது என்பதைப் பற்றி விளக்குகின்றது. பிறர்க்குக் கேடு செய்ய எண்ணவும் கூடாது; தீவினை செயலில் எள்ளளவும் பங்கேற்கவும் கூடாது என்பது குறள் மொழி காட்டும் வழி. பிறர்க்குத் தீங்கிழைக்க அஞ்சும் மனிதன் எல்லாச் செல்வங்களையும் பெற்று இன்புற்று வாழ்வான் என்கிறார் வள்ளுவர்.

மனித வாழ்வின் அனைத்துக் கூறுகட்கும் அற நூல்களில் முன்னோர்களும் நெறிகளை வகுத்துள்ளனர். இவையாவும் மனித வாழ்வைச் செம்மைப்படுத்துவதற்கான செந்நெறிகள் ஆகும். தன்னல மேலீட்டால், தற்செருக்கால் இவ்வொழுக்க நெறிகளிலிருந்து ஒரு பக்கமாக விலகி, பிறர்க்குத் தீங்கு செய்யாமல் நேர்மையாக வாழ்பவனை ஒருபோதும் கேடுகள் நெருங்கா என்பதுறுதி என்பது குறள் வாக்கு.(210) **'தீதும் நன்றும் பிறர் தர வாரா'** என்ற புறநானூற்று தொடர் ஈண்டு எண்ணப்படும். **தீங்கு செய்யாதவனைக் கேடு சூழ்வது அரிதினும் அரிது. 'அருங்கேடன்'** என்ற தொடர் கேடுகட்கு அரியவன் எனப் பொருள்படும்.

**திருச்சிற்றம்பலம்**



## அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்



அன்பு உள்ளங்களே! கடந்த 10 ஆண்டுகளாக அன்பர்களின் தயவால்தான் நமது மாத இதழ் நடைபெற்று வருகின்றது. ஆனால் பெரும்பாலான அன்பர்கள் நமது மாத இதழுக்கு சந்தா செலுத்தாமலேயே உள்ளனர்.

இருப்பினும் இதுவொரு ஆன்மீக மாத இதழ் என்ற காரணத்தினால் அவர்களுக்கும் தவறாது அனுப்பிக்கொண்டுதான் இருக்கிறோம். இதை உணர்ந்து அன்பர்கள் நிலுவையிலுள்ள தங்கள் தொகையை தெரிந்துகொண்டு சந்தா தொகையினை செலுத்தி இம்மாத இதழ் தொடர்ந்து நடைபெற உதவுமாறு அன்போடு வேண்டுகின்றோம்.

சந்தாகால விபரம் அறிய புத்தகத்தின் பின் அட்டையில் தங்கள் முகவரியின் கடைசி வரியினைக் காண்க.

மேலும் விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் **8012680865**

# மூத்தோர்சொல் அமிர்தம்

இந்தப் பிறவியில் நாம் பெறும் பலன்களையும், அடுத்த பிறவியில் பெறப்போகும் பலன்களையும் இப்போது செய்யும் காரியங்கள்தான் நிச்சயம் செய்கின்றன என்றால் நம்முடைய சுதந்திரமான எண்ணப்படி செய்யக்கூடிய காரியங்கள் எப்படி உண்டாகும்? குருமார்கள் கருமத்தையும், கரும பலனையும் பற்றி என்ன சொல்லுகின்றனர்? என்பது அனேகருடைய மனதிலும் இருக்கும் ஐயப்பாடு.

**பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்**
**கருமமே கட்டளைக் கல் - குறள் (505).**

அஃதாவது மனிதனுடைய உயர்வையும், தாழ்வையும் தேர்வு செய்யும் உரைக்கல்லாக இருப்பது அவரவர்களுடைய செயல்களே என்பதுதான் இதன் பொருள். இந்த குறட்பாவை கவனிக்க வேண்டியது அவசியம். பொதுவாக நம் வாழ்வு நம்முடைய செயல்களுக்கு ஏற்பவே அமைகின்றது.

மாமரத்தில் கண்ட மாங்கனியை எறிந்தெடுக்க எண்ணிய கோபாலன் மூன்று கற்களைத் தேர்ந்தெடுத்தான். அவற்றில் ஒன்றை எறிந்துவிட்டான். இரண்டாம் கல்லை எறியப்போகிறான். மூன்றாம் கல் இடது கையிலே இருக்கின்றது. இம்மூன்று கற்களும் குறி தப்பிவிட்டால் திரும்பவும் முயலுவான்.

ஒருவன் முற்பிறவியின் கரும வாசனைகளோடு பிறக்கிறான். அதைக் கட்டுப்படுத்த அவனால் இயலாது. பலன் எதுவாயினும் அதை அனுபவித்தே தீர்க்க வேண்டும். அது எறிந்துவிட்ட கல்லைப் போன்றது.

இப்பிறவியிலே நாம் செய்யும் கருமங்களில் பலவற்றை ஓரளவுக்கு நமது கட்டுப்பாட்டிற்குள் அமைக்கலாம். அது எறிவதற்கு ஓங்கிய இரண்டாவது கல்லைப் போல. முதற் கல் குறி தப்பிவிட்டதாயின் இரண்டாம் கல்லை கொஞ்சம் அதிகமாகக் குறிபார்த்து சரியாக எறிய முடியும்.

நாம் இனிமேல் செய்யும் கருமங்கள் இடது கையிலுள்ள மூன்றாவது கல்லைப் போன்றதாகும். அது முற்றிலும் நமது சக்திக்கு உட்பட்டது.

இம்மூவகை கரும கதியைப் பிராரப்தம், ஆகாமியம், சஞ்சிதம் என்று வகுத்துள்ளனர். 1) முற்பிறவியின் கரும பலன்கள் வாசனைகளாக உள்ளன. அவற்றை நாம் அனுபவித்தே ஆகவேண்டும். 2) இப்பிறவியில் இதுவரை செய்த கருமங்களின் பலன்களை அநேகமாக நமக்கு

*விருப்பமிருந்தால் மாற்றி அமைக்க முடியும். ஏகதேச பலன்கள் அனுபவித்தாகி இருக்கலாம். 3) இனிமேல் செய்கின்ற கருமங்களை எவ்வாறு செய்ய வேண்டும் என்று முடிவு கட்டியும், செய்து முடிக்கவும் நமக்கு முழு உரிமை உண்டு. ஒருவேளை முன்செய்த நற்கரும பலன்களையோ, தீக்கரும பலன்களையோ அடியோடு ஒழிக்க இனிமேல் உள்ள பெருமுயற்சியால் முடியலாம்.*

*இம்மூவகைக் கருமங்களில் மூவகைத் துயர்கள் நம்மைப் பின்தொடர்ந்து கொண்டிருக்கும். அவை ஆத்யாத்மீகம், ஆதிபௌதீகம், ஆதிதெய்வீகம் என்பவையே மூவகைத் துயர்கள்.*

*(1) ஆத்யாமீகத் துயர் என்பது உடம்பையும் உள்ளத்தையும் பற்றிய பீடைகள்.*

*(2) ஆதிபௌதீகம் என்பது கொடிய விலங்குகளாலும், கள்வர், சதிகாரர், எதிரி முதலியோர்களால் வரும் பீடைகள்.*

*(3) ஆதிதெய்வீகம் என்பது பேய்மழை, மழையின்மை, கொடுங்காற்று, இடி, மின்னல் இவைகளால் உண்டாகும் பீடைகள். இம்மூவகைத் துயர்களிலிருந்தும் விடுதலை பெறவேண்டிய அறத்தை கடைபிடிக்க வேண்டும். இவ்வாறு தனது முயற்சியால் நிறைநிலை எய்தலாம் என பதஞ்சலி மகரிஷி பகர்கின்றார்.*

*இதனின்று நாம் செய்ய வேண்டிய கருமங்கள் எதனை நோக்கி அமையவேண்டும் என்பது ஓரளவிற்குத் தெளிவாகிறதல்லவா.*

*மேலும் உலகியலில் அபூர்வ சாதனைகள் படைக்கும் விஞ்ஞானிகள் பலரும் எந்த மார்க்கத்தின் மீதும் நம்பிக்கை கொள்வதில்லை. அதனால் அவர்களுடைய பேரறிவோ, சாதனைகளோ மங்கிப் போவதில்லை. அப்படி இருக்க வாழ்க்கையில் வெற்றி பெற விரும்பும் ஒருவன் எதற்காக மார்க்கத்தின்மீது பற்றுக் கொண்டு அதற்குரிய சாதனைகளை ஏன் மேற்கொள்ள வேண்டும்? இதுவும் நம் எல்லோர் மனத்திலும் எழும் ஐயப்பாடே.*

*ஜீவர்களாகிய நாம் தெய்வீகமான பண்பு கொண்டவர்கள் என்பதை உணர வேண்டும். ஆனால் நம்முள் தொடர்ந்து வரும் ஆசைகளும் அவை பற்றிய எண்ணங்களும் நம்மை ஆட்டி வைக்கும்போது இந்த தெய்வீக உணர்வை மூடி மறைத்துக் கொள்கிறது. இதனையே நம் வள்ளல் பெருமானாரும்*

**மனமான ஒருசிறுவன் மதியான குருவையும்**
**மதித்திடான் நின் அடிச்சீர்**
**மகிழ்கல்வி கற்றிடான் சும்மா இரான் காம**
**மடுவினிடை வீழ்ந்து உழலுவன் உலோபமாம்**
**சிறுகுகையின் ஊடுபுகுவான்**
**செறுமோக இருளிடைச் செல்குவான் மதம்எனும்**

**செய்குன்றில் ஏறிவிழுவான்**
**இனமான மாச்சரிய வெங்குழியின் உள்ளே**
**இறங்குவான் சிறிதும் அந்தோ**
**என்சொல் கேளான் எனது கைப்படான் மற்றிதற்கு**
**ஏழையேன் என்செய்வேன்**

*என்று திருஅருட்பாவில் பாடியுள்ளார்.*

*மனிதனுடைய இயல்புகளை மனோதத்துவ அடிப்படையில் நமது ஞானிகள் மூன்று விதங்களாகப் பிரிக்கின்றனர்.*

*(1) தூய்மையாகவும், மேன்மையாகவும் உள்ள பண்புகளை கொண்டவன் சத்வ குணத்தை உடையவன்.*

*(2) உணர்ச்சிகள் மேலிட்டும், ஆவேசம் மிகுந்தும் செயல்படும் பண்புகளை கொண்டவன் ரஜஸ் குணத்தை அடைந்தவனாக இருக்கிறான்.*

*(3) சோம்பி, மந்தமாக செயலற்று ஒய்ந்திருப்பவன் தமஸ் குணத்தை கொண்டவனாக இருக்கிறான்.*

*இவை மூன்றும் அப்படி அப்படியோ, அல்லது கலந்தோ, ஏறக்குறைய வேறுபட்டோ வெவ்வேறு மனிதர்களை உருவாக்குகின்றன. அந்த உருவத்தையே நாம்* **'பர்சனாலிட்டி'** *என்று வர்ணிக்கிறோம்.*

*இவை அமைந்துள்ள அளவிற்கேற்ப அவனுடைய குண நலன்களும், ஒழுக்கமும் அமைகிறது. இவர்களுடைய வாழ்க்கையின் வெற்றி மனதையும், புத்தியையும் பொறுத்தே இருக்கிறது. அதற்கேற்ப அவர்களுடைய செயல்களும் அமைகின்றன. உணர்ச்சிகளைப் பொறுத்தே மனமும், அறிவுப்பூர்வமான பகுத்தறிதலைப் பொறுத்தே புத்தியும் இயங்குகின்றன.*

*இந்த இயக்கம் இரண்டுவிதமான வகைகளில் உண்டாகிறது. இந்த பகுத்தறிவு உலகியல்பான பொருட்களை நாடி ஆராயும்போது அதன் விளைவாக உலகப் பொருட்களின் வளர்ச்சியையும், மேன்மையையுமே உருவாக்குகின்றது. இதுவே விஞ்ஞானிகளின் சாதனை. இதைத்* **தீட்சணபுத்தி** *என்று சொல்வார்கள்.*

*ஆனால் இந்தப் பகுத்தறிவு மெய்ஞ்ஞான உணர்வை நாடி, ஆன்மீக வழியில் ஈடுபடும்போது ஞானிகளின் சாதனை வெளிப்படுகின்றது. இதைச்* **சூட்சுமபுத்தி** *என்று குறிப்பிடுவார்கள்.*

*இதனால்தான் உலகியலான விஞ்ஞான அறிவிலும், ஆராய்ச்சியிலும் ஈடுபடுபவன் சாஸ்திர அடிப்படையில் அமையும் ஆன்மீக வழியை நாடுவதில்லை. தீட்சண புத்தி எவ்வளவு கூர்மையானதாக இருந்தாலும் அது ஆன்மிகப் பாதையில் செல்லும் திறமையை பெறுவதில்லை. மரத்தையே வெட்டி எறியக்கூடிய கோடாலியானாலும் அழகுபடுத்தும் கத்தியின் நுட்பத்தைப்*

பெறமுடியாதல்லவா? அதனால்தான் நம் திருவள்ளுவப் பெருந்தகை

**ஐயுணர்வு எய்தியக் கண்ணும் பயனின்றே**
**மெய்யுணர்வு இல்லா தவர்க்கு** என்கின்றார்.

அதாவது, மெய்யுணர்வு இல்லாதவர்க்கு ஐந்து புலன்களின் வேறுபாட்டால் வளர்ந்த ஐந்து வகை உணர்வும் முற்றுப்பெற்ற போதிலும் பயன் இல்லை என்பதாம். விஞ்ஞானம் என்பது ஐம்புலன் அறிவில் முற்றுப் பெற்றது.

நம்முடைய ஆசைகளைப் பக்குவப்படுத்தி எண்ணங்களை வழிப்படுத்தி செயலிலும் பண்பிலும் அது தெரியும்படி செய்வதே மார்க்கத்தின் குறிக்கோள். இப்படி மேம்படும்போது தமஸ் என்ற நிலையிலிருந்து படிப்படியாகச் சத்வநிலையை எட்டிவிடுகின்றான். தெய்வீகம் தானாகவே அவனிடம் படிப்படியாக மலர்ந்துவிடுகின்றது. இதை ஆன்மீகத்தால்தான் செய்ய முடியும். விஞ்ஞானத்தில் எவ்வளவு ஈடுபாடு இருந்தாலும், வெற்றி கண்டாலும் ஆன்மீகத்தில் மனிதன் அடையும் வெற்றியைப் போன்று அடைய முடியாது. அதை நமக்கு ஈட்டிக் கொடுக்கக் கூடியது ஆன்மிக சாதனைகளே. இப்படி நாம் நம்முடைய கர்மங்களால்தான் நம் வாழ்வு நலம் பெறும் என்பதில் நம்பிக்கை கொண்டு, அதற்கு நம் ஞானிகள் அருளிய ஆன்மீகப் பாதையில் சென்று அதற்குத் தக்க கர்மங்களை தரும வழியில் செய்து நம்முள்ளே இருக்கும் மகா சக்தியை கண்டுவிட்டால் பிறகு வேறு எதுவுமே நமக்கு தேவையில்லை. நம் வள்ளல் பெருமானாரும் இதனையே பின்வருமாறு திருஅருட்பாவில் அருளியுள்ளார்.

**சத்தியவான் வார்த்தையிது தான் உரைத்தேன் கண்டாய்**
**சந்தேகம்இலை இதனில் சந்தோடம் உருவாய்**
**இத்தினமே அருட்ஜோதி எய்துகின்ற தினமாம்**
**இனிவரும் அத்தினங்கள்எலாம் இன்பமுறு தினங்கள்**
**சுத்தசிவ சன்மார்க்கம் துலங்கும்எலா உலகும்**
**தூய்மையுறும் நீஉரைத்த சொல்லனைத்தும் பலிக்கும்**
**செத்தவர்கள் எழுந்துலகில் திரிந்துமகிழ்ந்து இருப்பார்**
**திருவருள் செங்கோல் எங்கும் செல்லுகின்ற தாமே**

பிறவிச் சுழலில் மனிதன் வருந்தி வேதனைக்கு ஆளாகாமல் இருக்க நம் குருமார்கள் காட்டிய ஞான நெறியைக் கடைபிடிக்க வேண்டும். திருவருளின் செயல்பாட்டை புரிந்துகொள்ள வேண்டும். சர்வ வல்லமையுடைய கடவுள் ஒருவர் உண்டென்று நம்பி அவரிடம் பக்தி கொண்டு அடிபணிய வேண்டும். அப்போதுதான் நாம் இறைவனின் அருளால் உயர்நிலை அடைந்து எல்லையில்லா பேரானந்தத்தை உணர்ந்து உய்வடைய முடியும். இதைத் தருவதே ஆன்மீகப் பாதை.

# தனக்கு உவமை இல்லாதான்

இறைவன் இயற்கை வடிவினன், சத்தியப் பொருளானவன், தனக்கு ஒப்பாக வேறு ஒரு பொருளும் இல்லாதவன்.

**உலகநிலை முழுதாகி ஆங்காங்குள்ள உயிராகி**
**உயிர்க்குயிராம் ஒளிதானாகி**
**கலகநிலை அறியாத காட்சியாகி கதியாகி**
**மெய்ஞ்ஞானக் கண்ணதாகி**
**இலகுசிதா காசமதாய் பரமாகாச**
**இயல்பாகி இணையொன்றும் இல்லாதாகி**
**அலகில் அறிவானந்தமாகிச் சச்சிதானந்த**
**மயமாகி அமர்ந்த தேவே.**

நமது வள்ளல் பெருமான், இறைவனின் முழுமையான தன்மையை, இயல்பு நிலையை, அருள்நிலையை, ஒப்பற்ற ஆற்றலை, அண்டபிண்டம் அனைத்திலும் அணுவுக்கணுவாகியும் அப்பாலுக்கப்பாலுமாய் நீக்கமற நிறைந்து விளங்கும் இணையற்ற, அளவிடமுடியாத மெய்யறிவாகிய ஆனந்த வடிவமாய் அமைந்து நிற்கும் பேரின்பப் பெருநிலையை இப்பாடல் ஒன்றின் மூலமே வெளிப்படுத்தியுள்ளார். அதற்கு இணையானது வேறு ஒன்றுமில்லை. பெண்ணிற்கு இலக்கணம் அடக்கம்; ஆணிற்கு இலக்கணம் வீரம்; அரசருக்கு இலக்கணம் நேர்மை; துறவிக்கு இலக்கணம் தூய்மை; இது உலகியல் நடைமுறை. ஆனால் அகில உலகையும் படைத்துக் காத்து அருளும் இறைவனுக்கே இலக்கணம் வகுத்தவர் அருணகிரிநாதர்.

**“செம்மான் மகளைத் திருடும் திருடன்**
**பெம்மான் முருகன் பிறவான் இறவான்”**

**“பிறப்பு இறப்பு அற்றது எதுவோ அதுவே பரம்பொருள்; தோற்றமும் முடிவும் அற்றது எதுவோ அதுவே பரப்பிரம்மம்”** எந்த ஒரு பொருளுக்கு தோற்றம் உண்டோ அதற்குக் கட்டாயம் மறைவு உண்டு. இந்த இயற்கை நியதியை வென்றவர்கள் இறையருளைப் பெற்ற சித்தர்கள் மட்டுமே. சித்தர்கள் மட்டுமே இயற்கையைத் தன் கட்டுக்குள் கொண்டு வருபவர்கள். அவர்களால் மட்டுமே மரணத்தை வெல்ல முடியும்.

**ஒன்றாகக் காண்பதுவே காட்சி புலன் ஐந்தும்**
**வென்றான்தன் வீரமே வீரம் – என்றானும்**
**சாகாமல் கற்பதுவே கல்வி தனைப்பிறர்**
**ஏவாமல் உண்பதுவே ஊண்.**

இறைவன்என்று ஒருவனே அறிவதேஉண்மையானகாட்சி. ஐம்புலன்களையும் எவர் ஒருவர் அடக்கி ஆள்கிறாரோ அவரே உண்மையான வீரர். அவரே மகாவீரர், மரணத்தை வெல்லும் மெய்யறிவைக் கொடுக்கும் கல்வியே உண்மையான கல்வி. இவ்வாறு ஔவை பிராட்டியார் புலன் அடக்கத்தின் உயர்வையும், இறைவன் ஒருவனே என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளார்.

*நமது வள்ளல் பெருமான், 'இணை ஒன்றும் இல்லாதாகி' என்பதோடு,*

**'ஒன்றெனக் காணும் உணர்ச்சி என்றுறுமோ'** *என்றும்*

**'சாகாத கல்வியே கல்வி ஒன்றே சிவம்**
**தான்என அறிந்த அறிவே தகும் அறிவு'**

*என மேலே ஔவை பிராட்டியார் கூறியது போலவே மரணத்தை வெல்லும் கல்வியே உண்மையான கல்வி என்றும், இறைவன் ஒருவனே என்றும் கூறியிருப்பது மேலான மெய்யறிவின் அனுபவ வெளிப்பாடு. இதில் ஒன்றே சிவம் என்று கூறும் பெருமான், அந்த சிவம் தான்தான் என்று அறியும் அறிவே தகும் அறிவு என்கிறார். இதனை நல்லாத்தூர் சிவப்பிரகாச சுவாமிகளும் உறுதி செய்கிறார்.*

**தன்னைச் சிவம் என்றறிந்தானே**
**அறிந்தான்; தன்னை உண்மையாத்**
**தன்னைச் சிவம் என்றறியாதான்**
**அறியான் என்றும்; தன் உண்மை**
**தன்னைச் சிவம் என்றறிவன் அன்றே**
**பாசந்தனை நீப்பன்;**
**தன்னைச் சிவம் என்றறியாதான் தனக்குப்**
**பிறப்பே துணையாகும்.**

*இஃது வீர சைவநெறியில் தோன்றிய அருளாளரின் அனுபவ வெளிப்பாடு. வேதத்தின் மகா வாக்கியம்* **'அதுவாக நீ இருக்கிறாய்'** *என்கிறது. அதைத்தானே நம் வள்ளல் பெருமானார்,* **ஒன்றே சிவம்; அந்த சிவம் தான்தான் என்று அறியும் அறிவுதான் மெய்யான அறிவு** *என்கின்றார். இதே உண்மையைத்தான் சிவப்பிரகாச சுவாமிகளும் தன்னைச் சிவம் என்று அறிந்தவனே தன்னை உண்மையாக அறிந்தவன் என்கிறார். ஈண்டு,* **தன்னை அறிய தனக்கொரு கேடில்லை** *என்ற திருமந்திரத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். 'தன்னையறிந்து இன்பமுற வெண்ணிலாவே ஒரு தந்திரம் நீ சொல்ல வேண்டும் வெண்ணிலாவே' என்று வள்ளல் பெருமான் பாடுவதும் தன்னைச் சிவம் என்ற உண்மையை அறிவதற்கே. இதுதான் உண்மை; இவ்வுண்மையை உணரப் பெறுவதே மெய்யறிவு.*

*ஒன்றாய் இருப்பவன் இறைவன். ஒவ்வொரு உயிரிலும் பரவி நிற்கின்றபோது அவனே பலவாய் தோற்றமளிக்கின்றான். ஒவ்வொரு உயிரின் இயக்கத்திற்கும் அவனே கர்த்தனாய் இருப்பதை* **'ஆடுங் கருணைப் பரஞ்சோதி'** *என்கிறார் தாயுமானவர்.*

*'ஆங்காங்குள்ள உயிராகி உயிருக்குயிராம் ஒளிதானாகி' என்று பெருமான் கூறியிருக்கும் இறைநிலை, தாயுமானவர் கூறியிருக்கும் இறைநிலையும் ஒன்றாகவே உள்ளது. மாணிக்கவாசகர் திருவாசகத்தில் இதே இறைநிலை உண்மையை* **'ஏகன், அனேகன் இறைவனடி வாழ்க'** *என விளக்கியுள்ளார்.* **ஏகன்** *என்ற சொல் இறைவன் ஒருவனே*

என்பதைக் குறிக்கிறது. **அனேகன்** என்ற சொல் அனைத்து உயிர்களிலும் இறைவன் பரவி நின்று பலவாகத் தோற்றம் அளிக்கின்றான் என்பதை உணர்த்துகின்றது. இதையே அருணகிரிநாதரும்,

**இருவினை மும்மலமுமற இறவியொடு பிறவியற**
**ஏகநாயகா லோகநாயகா இமையவர் பெருமானே**

எனத் திருப்புகழில் கூறியுள்ளார். **ஏகநாயகன்** – ஒரே தலைவன் என்பதையும், **லோகநாயகன்** – இறைவன் உயிர்கள் அனைத்திலும் வியாபித்துள்ள தன்மையையும் விளக்குகிறது. மாணிக்கவாசகர், தாயுமானவர், அருணகிரிநாதர், வள்ளல் பெருமானார், ஔவையார் ஆகிய ஐவரும் திருமூலரைப் போன்றே **இறைவன் ஒருவனே** என்று அறுதியிட்டுக் கூறுகின்றனர். உயிர்க்குயிராய் பரவி நிற்கின்றபோது அவனே பலவாய்த் தோற்றமளிக்கிறான் என்னும் ஒருமித்த கருத்தையே கூறியிருப்பதை ஒப்புநோக்கி உணரவேண்டும். அனைத்திற்கும் மேலாக சமயங் கடந்தவன் இறைவன்; அனைத்து சமயங்கட்கும் இறைவன் ஒருவனே என்று உணர்த்தியிருக்கும் பாங்கினை எண்ணி எண்ணி வியக்க வேண்டியுள்ளது.

அருகர், புத்தர், அரன், அயன், ஆதி, நாராயணன் அனைத்துப் பெயர்களும் அருட்பெருஞ்சோதி ஆண்டவர் ஒருவர்க்கே. **கடவுள்** என்ற சொல்லை ஆய்ந்து அறிந்த சான்றோர் வாக்கு. 'கடந்து உள்ளே இறைவனைக் காணுதல்' என்பதே 'கடவுள்' என்னும் சொல்லுக்கான பொருள். கடவுள் என்பது பெயர்ச்சொல் அல்ல. அது வினைச் சொல். கடவுளை அடைய வேண்டும் என்ற எண்ணம் வருமேயானால், முதலில் கடவுள் நிலை என்ன? கடவுள் எத்தகைய பேராற்றல் மிக்கவன், எவ்வவற்றைக் கடந்தால் உள்ளே அவனைக் காணலாம் என்பதை நன்கு அறியவேண்டும்.

அணுவும் செல்ல முடியாத நிலைகளிலும் செல்லக்கூடியவன் இறைவன், எல்லாப் பொருள்களிலும் அவனே இருக்கிறான். அவன் இல்லாமல் எந்தப் பொருளும் இல்லை! அத்தகைய மெய்ப்பொருள், சொல்வன்மையாகிய பேச்சுத் திறமையால், பெருஞ்செல்வப் பெருக்கினால், உலகியல் அறிவினால் அறிந்து அடைய முடியாத வல்லமை உடையது. எனவே உண்டியலில் கட்டுக்கட்டாகப் பணத்தைப் போடுவதால் அடைந்து விடலாமா? பலமணி நேரம் சொற்பொழிவு செய்வதால் கிடைத்துவிடுமா? விஞ்ஞான அறிவைக் கொண்டு நெருங்க முடியுமா? முடியாது முடியாது என்றே பெருமானோடு அருணகிரிநாதரும் உறுதிப்படுத்துகின்றார்.

**வாசித்துக் காணொணாதது பூசித்துக் கூடொணாதது**
**வாய்விட்டுப் பேசொணாதது – நெஞ்சினாலே**
**மாசர்க்குத் தோணொணாதது நேசர்க்குப் பேரொணாதது**
**மாயைக்குச் சூழொணாதது – விந்துநாத**
**ஓசைக்குத் தூரமானது மாகத்துக் கீறதானது**

**லோகத்துக்காதி யானது – கண்டு நாயேன்**
**யோகத்தைச் சேருமாறு மெய்ஞ்ஞானத்தைப் போதியாய் இனி**
**ஊனத்தைப் போடிடாது – மயங்கலாமோ**

*வாசித்தும், புறவழிபாடாகிய பூசித்தும், வாய்விட்டுப் பேசியும் இறைவனை அடைய முடியாது. மனத்தில் மாசு உடையவர்க்குத் தோன்றவே தோன்றாது. ஆனால் ஈரம் உள்ள நெஞ்சம் உடையவர்களை விட்டு நீங்கவே நீங்காது.*

**'வஞ்சமறு நெஞ்சினிடை எஞ்சலற விஞ்சுதிறன்**
**மஞ்சுற விளங்கும் பதம்'**

*என திருவடிப்புகழ்ச்சியில் இவ்வுண்மையை எடுத்து இயம்புகின்றார் நம் வள்ளல் பெருமானார். மேலும் 'பொய்வந்த நெஞ்சினில் போகான்டி', 'சூதாண்ட நெஞ்சினில் தோயாத நேயமே' என்பனவும் அதே உண்மையின் அடிப்படையில்தான். அஃதாவது உண்மையான கைம்மாறு கருதாத மெய்யன்பாகிய காதல் உடையவர்களை விட்டு இறைவன் பெயர்ந்து செல்லமாட்டான். திருமூலரும், ஆர்வமும் நெஞ்சில் ஈரமும் இருந்தால் திருவடியைக் காணலாம் என்கின்றார்.*

**"ஆர்வம் உடையவர் காண்பர் அரன்தன்னை**
**ஈரம் உடையவர் காண்பார் இணையடி"**

*இதைவிடுத்து ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் யோகம் இருப்பினும் அவனைக் காணமுடியாது என்றே உறுதிபடச் சொல்கின்றார். இதனை நம் வள்ளல் பெருமானார்* **"ஈரமும் அன்பும் கொண்டு நின் இன்னருள் பெற்றேன்"** *என்று அருளியுள்ளார்கள். மேலும்*

**'எத்துணையும் பேதமுறாது எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி உள்ளே**
**ஒத்துரிமை உடையவராய் உவக்கின்றார் யாவர்அவர் உளந்தான் சுத்த**
**சித்துருவாய் எம்பெருமான் நடம்புரியும் இடம்எனநான் தெரிந்தேன் அந்த**
**வித்தகர்தம் அடிக்கேவல் புரிந்திடஎன் சிந்தைமிக விழைந்த தாலோ.**

*என்று திருஅருட்பாவில் பாடியுள்ளார். இதல்லாது உரைநடைப் பகுதியில்* **"சாதனங்கள் ஒன்றும் வேண்டாம். ஏதாவது ஓர் சாதனம் சொல்லக் கேட்டு அதன்படி நடந்தால் சிறு ஒளி உண்டாகும். அதைக் கண்டு பல்லிளித்து இறுமாந்து கெட நேரிடும். ஆதலால் காலம் தாழ்த்தாது எல்லா உயிரையும் தன்னுயிரைப் போலப் பார்க்கும் உணர்வை வருவித்துக் கொள்ளுதல் வேண்டும். இதுவே சாதனம்"** *என்று அருளியுள்ளார். மேலும்* **"என்னை ஏறா நிலைமிசை ஏற்றிவிட்டது யாதெனில் தயவு"** *என்றும் அருளியுள்ளார். எனவே நாம் அனைவரும் பெருமானார் கூறியபடி கருணை ஒன்றே நம்மை கடைத்தேற்றும் சாதனமெனக் கருதி, கடவுளிடத்தில் மாறாத அன்பையும், ஜீவர்களிடத்தில் மாறாத தயவையும் செலுத்தி எல்லாம் வல்ல அருட்பெருஞ்ஜோதி ஆண்டவரின் அருளையடைந்து உய்வோமாக.*

*திருச்சிற்றம்பலம்*

## அருட்பெருஞ்ஜோதி அகவல் விளக்கம்

**எம்மையும் என்னைவிட்டு இறையும் பிரியாது 111**
**அம்மை அப்பனுமாம் அருட்பெருஞ்ஜோதி 112**

*எம்மையும் - இம்மை மறுமை அம்மை ஆகிய எம்மையிலும், எப்பிறப்பிலும்*

*என்னைவிட்டு - என்னுடைய உள்ளத்தில் என்னைத் தனிக்கவிட்டு, தனியாகவிட்டு விட்டு*

*இறையும் பிரியாது - தான் சிறுபொழுதேனும் பிரியாத*

*அம்மை அப்பனுமாம் - அம்மையும் அப்பனுமாகிய (தாயும் தந்தையுமாகிய)*

*அருட்பெருஞ்ஜோதி - அருட்பெருஞ்ஜோதியே!*

*எல்லாப் பிறப்புகளிலும் என்னைவிட்டு இறைப்பொழுதும் (சிறுபொழுதும்) பிரியாது என் உயிருக்குத் தாயும் தந்தையுமான அருட்பெருஞ்ஜோதியே!*

*பெற்றதாயும் பெற்றதந்தையும் (பெற்றோர்) வேறுவேறாக இருவராக இருக்கின்றனர். தனித்தனியாக இருக்கின்றனர். இறைவனோ தாய் தந்தை ஆகிய இருநிலையிலும் ஒருவனாக, ஒன்றாகவே, இருக்கிறான்.*

*பெற்ற தாயும் தந்தையும் இந்த ஒரு பிறவிக்கு மட்டுமே தந்தை தாயாவர். பிறவிதோறும் வேறு வேறு தாய், தந்தையருக்குப் பிள்ளையாகப் பிறக்கிறோம். இறைவனாகிய அம்மையப்பனோ எல்லாப்பிறப்பிலும் நமக்கு அம்மையப்பனாக இருக்கிறான்.*

*பெற்ற தாய்தந்தையர் சிலபல காலம் பிரிந்திருக்க நேரும். இறைவனான அம்மையப்பன் பிரிவதே இல்லை. எப்போதும் உடனிருக்கிறான். உடனிருந்து உதவுகிறான், காப்பாற்றுகிறான்.*

**உளவினில் அறிந்தால் ஒழிய மற்று அளக்கின் 123**
**அளவினில் அளவா அருட்பெருஞ்ஜோதி 124**

*உளவு, அளவு என இரண்டு உபாயங்கள்.*

*உளவு - தந்திரம், யுத்தி, நுட்பச்சிந்தனை*

*கடவுள் பக்தி, உயிர் இரக்கம் (ஜீவகாருண்யம்) நல்லொழுக்க வாழ்வு ஆகியனவே வள்ளலார் கூறும் முக்கிய உளவுகளாம். சத்விசாரம், பரோபகாரம் ஆகியனவும் வள்ளலார் கூறும் உளவுகளாம்.*

*அளவு - காட்சி அளவை, கருதல் அளவை, நூல் அளவை.*

*சுருதி, யுத்தி, அனுபவம் முதலிய பிரமாணங்கள் வடமொழி வழக்கு*

காண்டல், கருதல், நூல் அளவைகள் – தமிழ் நூல் வழக்கு.

சுருதி – நூல், வேதப்பிரமாணம், ஆகமப் பிரமாணம்

யுக்தி – கருதல்

அனுபவம் – காண்டல்

உளவுகளைவிட அளவுகளே அதிகம் (மிகுதி). பற்பல மதங்களும் சமயங்களும் பற்பல அளவைகளைக் கூறும். அளவு(அளவை)களால் அறிதல் சாதாரணம். உளவுகளால் அறிவதே விசேடம்(சிறப்பு). இறைத்தன்மையை, இறையனுபவத்தை அளவைகளைக் கொண்டு அறிதல் முதற்படி; உளவுகளைக் கொண்டு அறிதல் முடிவான படி.

அருட்பெருஞ்ஜோதியை அளவைகளால் அளந்தறிய இயலாது. உளவுகளாலேயே கண்டறிய வேண்டும். அளவுகளால் அளக்கப் பெறாதது அருட்பெருஞ்ஜோதி. உலகம் இப்போது அளப்பில்தான் மூழ்கியுள்ளது. ஆளாளுக்கு அளக்கிறார்கள். அளப்பதற்கு ஓர் எல்லையே இல்லை. உளவுத்துறை என்று அரசில் ஒரு துறையே உள்ளது. அளவுகள் வெளிப்படை. உளவுகள் மறைவானவை. அருட்பெருஞ்ஜோதி, அந்தரங்கமாக அகமுகமாக அறியப் பெற வேண்டியது. பகிரங்க அளவை முயற்சிகள் அவ்வளவாகப் பயன்தரா. தொடக்கத்தில் ஓரளவுக்கே அறியக் கூடும். முடிவான அனுபவங்களை உளவு ஒன்றே தரும்.

கிளக்கின்ற **மறைஅளவை ஆகமப்பே ரளவை**
 கிளந்திடு**மெய்ச் சாதனமாம் அளவைஅறி வளவை**
விளக்கும் இந்த அளவைகளைக் கொண்டு நெடுங் காலம்
 மேலவர்கள் **அளந்தளந்து மெலிகின்றார்** ஆங்கே
**அளக்கின்ற கருவிஎலாம் தேய்ந்திடக் கண்டாரே**
 **அன்றி** ஒரு வாறேனும் **அளவு கண்டார் இலையே**
துளக்கம்உறு சிற்றறிவால் ஒருவாறென் றுரைத்தேன்
 சொன்னவெளி வரையேனும் துணிந்தளக்கப் படுமோ 5703

என்று திருவருட்பாவில் ஓர் அருமையான பாட்டுண்டு. இப்பாட்டுக்கு முந்திய பாட்டு **"இது மட்டே அளப்பது ஒருவாறு, அதன்மேல் அளப்பது அரிது அரிதே"** என்று முடிகிறது (5702). **"உளவினில் அறிந்தாலொழிய மற்றளக்கின் அளவினில் அளவா அருட்பெருஞ்ஜோதி"** என்னும் அகவல் வரிகளுக்கு மிகவும் பொருத்தமான பாடல்கள் இவை.

அளவைகளால் அறிவது ஒருவாறுதான். ஆனால் முழுவதுமாக அறியமுடியாது. முழுவதும் அறிவதற்கு உளவுகளே உரியவை. அவ்வுளவு யாது? உளவுகள் யாவை? ஜீவகாருண்யம் ஒன்றே உளவு. தயவு கருணை ஒன்றே உளவு. கருணையும் சிவமுமே பொருள் என்பார் வள்ளலார். அருட்பெருஞ்ஜோதியை அறிவதற்குத் தனிப்பெருங்கருணை ஒன்றே உளவு. சன்மார்க்க மகாமந்திரத்திலேயே

இவ்வுளவு உள்ளது. பக்தியே சாதனம் என்பது பழைய பாதை. கருணையே சாதனம் என்பது வள்ளலார் காட்டும் புதிய பாதை. பக்தி வேண்டாம் என்பது பொருளன்று; கருணை இல்லாமல் வெறும் பக்தியால் மட்டுமே பயனில்லை என்பதே இதன் உட்பொருள்.

வள்ளற்பெருமான் வடலூரை அடுத்த மேட்டுக்குப்பம் சித்திவளாகத் திருமாளிகையில் ஸ்ரீமுக வருடம் ஐப்பசி மாதம் ஏழாம் தேதி புதன்கிழமை (22.10.1873) பகல் 8 மணிக்கு முதன் முதலாகச் சன்மார்க்கக் கொடியைக் கட்டிக் காட்டிச் செய்த பேருபதேசத்தில்

“இப்போது ஆண்டவர் என்னை ஏறாத நிலைமேல் ஏற்றியிருக்கின்றார். என்னை ஏறாநிலைமிசை ஏற்றிவிட்டது யாதெனில் தயவு” என்று கூறியிருப்பதைக்காண்க.

வள்ளற்பெருமானுடைய சமரச சுத்த சன்மார்க்கத்தில் கருணையே முதற்சாதனம். “ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு” என்கிறார் வள்ளலார். வள்ளற்பெருமான் எழுதியருளிய ஜீவகாருண்ய ஒழுக்கம் என்ற நூலின் தலைப்பே இதுதான். “ஜீவகாருண்ய ஒழுக்கமே கடவுள் வழிபாடு” என்று தலைப்பிட்டுத்தான் அந்நூலையே தொடங்குகிறார்.

சைவம் அன்புநெறி. வள்ளலாரின் சமரச சன்மார்க்கம் அன்பு நெறியோடு கூடிய கருணைநெறி. கருணையே (ஜீவகருணையே, ஜீவகாருண்யமே) சாதனம் என்பது வள்ளற்பெருமான் நமக்குக் கூறும் உளவு. ஏனைய அளவுகளெல்லாம் அப்புறம்தான்.

கருணையாம் உளவினால் ஜோதியைக் காண்போம். அளவினால் அளவா அருட்பெருஞ்ஜோதி கருணையால் காணப்படும்.

## பாடலும் பொருளும்

**பாங்குளநாந் தெரிதுமெனத் துணிந்து கோடிப்**
**பழமறைகள் தனித்தனியே பாடிப் பாடி**
**ஈங்குளதென் றாங்குளதென் றோடி யோடி**
**இளைத்திளைத்துத் தொடர்ந்துதொடர்ந் தெட்டுந்தோறும்**
**வாங்குபர வெளிமுழுது நீண்டு நீண்டு**
**மறைந்துமறைந் தொளிக்கின்ற மணியே யெங்கும்**
**தேங்குபர மானந்த வெள்ளமே சச்**
**சிதானந்த வருட்சிவமே தேவ தேவே – மகாதேவமாலை (58)**

வேதங்கள் பதிநூல் என்றும், ஆகமங்கள் பசுநூல் என்றும் புராணங்கள் பாசநூல் என்றும் வள்ளற்பெருந்தகை விளக்குவார். இறைவனைப் புகழ்வதும் இறைவனைப் பற்றி விளக்க வல்லதும் வேதங்கள் எனக் கூறுவதுண்டு. வேதங்கள் முதன் முதலில் இறைவனால்

சொல்லப்பட்டதாகவும் கூறுவர். அந்த வேதங்கள்தான் முதன் நூல். எனவே அது பழமுறை எனப்பட்டது. அதுவும் கோடிக்கணக்காக ஏற்பட்டுவிட்டதாம். நாம் இறைவனுக்கு அருகிலேதானே இருக்கிறோம். எனவே அவனைத் தெரிந்துகொள்ளலாம் எனத் துணிவு கொண்டு ஒவ்வொரு வேதமும் தனித்தனியாக பாடிக்கொண்டே இருக்கிறதாம். ஆனாலும் அவனைக் காணாமல் அவனைத் தேடிக்கொண்டே இருக்கின்றனவாம். எப்படியெனில் இறைவன் இங்கே இருக்கின்றான் என்று கூறி அங்கே சென்று பார்க்கும்போது வேறு எங்கோ இருப்பதாக அறிவதால் அங்கே இறைவன் இருக்கிறான் என்று அங்கே சென்று தேடுகின்றதாம்.

இறைவனைப்பற்றிய விளக்கங்களைத் தரும் வேதங்களே இறைவனைத் தேடித்தேடி இளைத்துவிட்டனவாம். இறைவனை யாராலும் அளக்கமுடியவில்லை. எந்தெந்தக் கருவியைக் கொண்டு அளந்து பார்த்தும் அளக்கின்ற கருவியெலாம் தேய்ந்திடக் கண்டாரேயன்றி ஒருவாறேனும் கண்டார் இல்லையே என்பது உண்மை. எனவே வேதங்கள் இறைவனைத் தேடித் தேடி இளைத்தாலும் மேலும் அம் முயற்சியில் இடைவிடாது தொடர்ந்து கொண்டே இருத்தலைத் தொடர்ந்து தொடர்ந்து எனக் கூறினார்.

அவ்வாறு தொடர்ந்து அவனை எட்டக் கூடிய நிலையில் நீண்டும் அவனைக் காணவில்லையாம். அண்டங்கள் பல கோடிக்கணக்கானவை. இந்தப் பர வெளியில் இருக்கின்றன. புதிய புதிய அண்டங்களும் தோன்றிக்கொண்டே இருக்கின்றன. இருக்கின்ற அண்டங்கட்கு மட்டுமா இந்தப் பரவெளி இடம் கொடுத்துள்ளது? தோன்றிக்கொண்டே இருக்கும் அந்த அண்டங்கட்கும் இடம் அளிப்பதோடு இன்னும் தோன்றப் போகும் அண்டங்கட்கும் இடமளிக்கத் தயாராய் இருக்கின்றதால் அதை வாங்கு பரவெளி என்றார்.

எங்குத் தேடியும், எவ்வளவுதான் பாடியும், எந்த அளவிற்கு முயற்சிசெய்தும் இறைவனை அருகிலேயே உள்ள வேதங்களாலேயே காணமுடியவில்லை என்றால் அவன் இல்லை என்று கொள்ளலாமா? கொள்ளக்கூடாது. ஏனென்றால், பரவெளி முழுதும் நீண்டு நிறைந்து விளங்குகின்றான். அவன் எல்லாப் பொருள்களிலும் கலந்து நிறைந்து விளங்குகின்றான். மண்ணினில் மண்ணாய், நீரினில் நீராய், நெருப்பினுள் நெருப்பாய், காற்றினுள் காற்றாய், வெளியினுள் வெளியாய், உயிர்ப்பொருட்களில் உயிராய், ஜடப்பொருள்களில் ஜடமாய் ஒன்றிக் கலந்து விடுவதால் அவனைத் தனியாகக் காண முடிவதில்லை. அதாவது அவன் எல்லாவற்றிலும் மறைந்து ஒளித்துக் கொண்டுள்ளான் என்பதே உண்மை.

*மகாதேவ மாலையில் உள்ள ஒவ்வொரு பாட்டும் ஒரு மலர். எல்லா மலர்களையும் கோர்த்ததொரு மாலை. வள்ளலார் தனது பாக்களைப் பற்றி ஒரு கருத்தைத் தெளிவாகச் சொல்லுகின்றார்.*

**நாடுகின்ற பலகோடி அண்டபகிரண்ட நாட்டார்கள் யாவரும் அந்நாட்டாண்மை வேண்டி நீடுகின்ற தேவரென்றும் மூர்த்திகளாம் என்றும் நித்தியர்கள் என்றும் ஆங்கே நிலைத்தவெல்லாம் மன்றில் ஆடுகின்ற சேவடிக்கே தங்கள் தங்கள் தரத்துக்கான வகை சொன்மாலை அணிந்ததனாலன்றோ பாடுகின்ற என்னுடைய பாட்டெல்லாம் பொன்னம்பலப் பாட்டே சிற்றம்பலப் பாட்டே தோழி.**

*வள்ளலார் பாட்டெல்லாம் பொன்னம்பலப் பாட்டே சிற்றம்பலப்பாட்டே என்றால் அவைகட்குப் புறத்தே மட்டும் பொருள் பார்த்தல் நிறைவுறாது. அகத்தேயும் பார்க்கவேண்டும். ஏனெனில் இறைவனை அகத்தே காணக் கூடுமேயன்றி புறத்தே காணுதல் இயலாது என்பது வள்ளலாரின் தீர்க்கமான கருத்து.*

**பொதுவுணர் உணரும் போதலால் பிரித்தே**
**அது எனில் தோன்றா அருட்பெருஞ்ஜோதி (அகவல்)**

*மனித தேகத்தில் புருவமத்தியில் (பொது) இறைவன் விளங்குவது உண்மையாயும் அனுபவமாயும் இருக்க அவனைப் புறத்தே தேடினால் கிட்டுவானா? நமது புருவமத்தியில் ஆறுபட்டையாய் பிரகாசம் பொருந்திய மணியொன்று உண்டு. அதைத்தான் சண்முகம் என்று பெரியோர்கள் கூறுவர் என்பது வள்ளலார் தரும் விளக்கம். அதனையே இந்தப் பாடலிலும் வேதங்கள் முதல் அனைத்தும் எங்கெங்கே தேடியும் காணக் கிடைக்காத இறைவன் தேடுகின்ற அறிவுடைப் பெரியோர் அகத்தே மணியாய் ஒளிந்து கொண்டு இருப்பதைத்தான்* **'மறைந்து மறைந்து ஒலிக்கின்ற மணியே'** *என்று விளக்கினார். வேதங்கள் முதலியவற்றின் துணைக்கொண்டு வெளியே தேடும் அறிஞர்களின் அகத்தே மணியாய் ஒளிந்து கொண்டு பிரகாசிக்கிறான் என்பதே இப்பாடலின் திரண்ட கருத்தாகும். சிவானுபவப் பரமானந்த வெள்ளம் எங்கும் தேங்கியுள்ளது. சிவானுபவம் பெற்றோர் சச்சிதானந்த அனுபவநிலையில் அதனை அனுபவிக்கலாம். அந்த ஆனந்தம் எங்கும் நிறைந்துள்ளது.*

Owned, Published & Edited by S. Mahendrababu
from Vallalar Sathya Dharmasalai, Mountain Roundway,
Thiruvannamalai Tk. & Dt. - 606 603.
and Printed by J. Radha at Subam Printers
39/1, Kosamada Street, Tiruvannamalai - 606 601.

**Advertisement**


## மகாமந்திரம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

வடலூர் சித்தி வளாகம் என்கின்ற மேட்டு குப்பத்தில் நடைபெறும் பசி பிணி போக்கும் திரு பணிக்கு உதவ அனுகுவீர்.

திரு. நந்தி சரவணன் ஐயா
9842679999 / 9442327059

திருவருள் துணையுடன்

BNS ∝ Wings of Wisdom

# eXS Lending Library

## எக்சஸ் வாடகை நூலகம்

**Books for All Ages**

Unlimited Books Starts @ INR 1200/.

| Scheme | Books at a Time |
|---|---|
| Super Reader | 10 |
| Book Lover | 5 |
| Elite Reader | 4 |
| Language Reader | 3 |
| Smart Reader | 1 |

Door Delivery Available*

**HABITUAL READER**

# Pay as you take and read, like 10% to 15% on book cost of 15 days.

# % may change based on books popularity, availablity and price

## SOULFUL HOME

**Schemes starts @ INR 2400/=**

| Sno | Facilities | Super | Max | Book Max | Mag Max |
|---|---|---|---|---|---|
| 1 | Books | 30 | 15 | 7 | 2 |
| 2 | Magazines | 15 | 10 | 5 | 5 |
| 3 | Scheduled Visits | 12 | 12 | 12 | 24 |
| 4 | Unscheduled Visits | 6 | 6 | 3 | 0 |

Deposit INR - 500/



**Key advantages**

1. Lifetime membership @ 100% refundable deposit INR 500/=
2. Reading charges starts @10%
3. Hassle free door step service available

AYYAPPAN THANGAL 26792007 / VALASARAVAKKAM 42105700 / PORUR 42107304 / OMR 42863478 / VADAPALANI 42642491



தலை குனிந்து என்னை பார் .....
தலை நிமிர்ந்து
உன்னை நடக்க வைக்கின்றேன் – புத்தகம்

9444 408 804

Suriyaa Digital
Porur - 9677227755

## திருமந்திரத் தேன்

**வைத்த பசுபாசம் மாற்றும் நெறி வைகி,**
**பெத்தம் அற முத்தன் ஆகி, பிறழ்வுற்றுத்**
**தத்துவம் உன்னித் தலைப்படாதவாறு**
**பித்தான சீடனுக்கு ஈயப்பெறானே. – கடமை மறந்தவன்**

வியாபகம் உடைய ஆன்மாவைப் பசுவாகக் கட்டுப்படுமாறு செய்வது ஆணவமலம். அதனை நீக்கும் தவநெறியில் வாழ்ந்து, கட்டுநிலை நீங்க, முத்திநிலை எய்தி, உலகியலினின்றும் அருளியலுக்கு மாறி (உலகத்தையே அருள் அனுபவமாக அனுபவித்து) மெய்ப்பொருளாகிய இறைவனையே இடையறாது தியானித்து அவனை அடைதல் கடமை. இதைவிட்டு உலகியலின்மீது பித்துக்கொண்டு அலையும் ஒருவன் சீடன் ஆகான். அவனுக்கு ஞானம் வழங்கலாகாது.

**மன்னும் மலம் ஐந்தும் மாற்றும் வகை ஓரான்**
**துன்னிய காமாதி தோயும் தொழில் நீங்கான்**
**பின்னிய பொய்யன், பிறப்பு இறப்பு அஞ்சாதான்**
**அன்னியனாவதன் அசத் சீடனாமே. – ஆகாதன செய்பவன்**

ஆணவம், கன்மம், மாயை, மாயேயம், திரோதானம் என்னும் ஐந்து மலங்களும் உயிரைப் பற்றிக் கொண்டு விடாதிருக்கின்றன. அவற்றை நீக்குதல் அரிய சாதனை. அதைச் செய்யான். காமம், கோபம், உலோபம், மோகம், செருக்கு, பகைமை என்னும் ஆறு பகையைப் பகையென்று அறியாது அவற்றில் ஆழ்ந்து கிடப்பான். ஒன்றை மறைக்க ஒன்பது எனப் பலவாகிய பொய் உரைப்பான். பெருந்துன்பமாகிய பிறத்தலையும் இறத்தலையும் துன்பமாக உணராதவன். இவ்வாறு தன் உயிருக்கு ஆகாதவற்றைச் செய்யும் ஒருவன் ஞானத்திற்கு தொடர்பு இல்லாதவன். எனவே இப்படிப்பட்டவன் நல்ல சீடனல்லன்.


**பாசத்தில் இட்டது அருள், அந்தப் பாசத்தில்**
**நேசத்தை விட்டது அருள் அந்த நேசத்தில்**
**கூசற்ற முத்தி அருள்,'அந்தக்' கூடத்தில்**
**நேசத்துத் தோன்றாநிலை அருள் ஆமே. – எல்லாம் அருளின் செயலே**

ஆன்மாவை மாயை, கன்மம் என்ற மலங்களுடன் தொடர்புபடுத்தி அவற்றால் விளையும் பந்தத்தால் கட்டுப்படச் செய்வது இறைவன் அருளே. பொருள்கள் மீதும் மக்கள் மீதும் தன் உடலின் மீதும் உள்ள பற்றை விடச் செய்வதும் அருளே. இறைவனிடம் இடையறாப் பேரன்பு பூண்டு, தடைப்படா நிலையாகிய முத்தியை அடையச் செய்வதும் அருளே. இறைவனுடன் கலந்து பேரன்புடன் நிற்றலாகிய இந்நிலையில் 'அவன் வேறு, நான் வேறு' என்று ஆன்மா உணராமல் இருத்தற்குக் காரணமாவதும் அருளே.

திருச்சிற்றம்பலம்

# உள்ளது உரைத்தல்

*சமரச சுத்த சன்மார்க்கத்தின் வேதமாகிய ஜீவகாருண்ய ஒழுக்கம் இரண்டாம் பிரிவிலிருந்து...*



## ஜீவகாருண்யமும் – கடவுள் வழிபாடும்.

ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக பொதுவாக உண்டாகின்ற ஆன்ம உருக்கத்தைக் கொண்டு கடவுள் வழிபாடு செய்து வாழ்தலே ஜீவகாருண்ய ஒழுக்கம்.

இஃது எவ்வாறெனில், தயிருக்கும் கட்டைக்கும் கடைதலால் நெகிழ்ச்சி உண்டாக உண்டாக அதன் உள்ளிருக்கின்ற வெண்ணையும் நெருப்பும் வெளிப்படும். அவ்வண்ணம் வெண்ணையும் நெருப்பும் வெளிப்படவே அவற்றின் உண்மைத் தன்மை அனுபவமாகிப் பூரணமாகும். அதுபோல் ஜீவர்களுக்கு ஜீவர்கள் விஷயமாக ஆன்ம உருக்கம் உண்டாக உண்டாக அந்த ஆன்மாவின் உள்ளிருக்கின்ற கடவுள் விளக்கமாகிய அருள் வெளிப்பட்டு பூரணமாக விளங்கும். அத்திருவருள் விளங்கவே கடவுள் இன்பம் அனுபவமாகிப் பூரணமாகும். அவ்வனுபவம் பூரணமாதலே கடவுள் வழிபாடு என்று அறியவேண்டும்.

– திருஅருட்பா வசனபாகம்

திருச்சிற்றம்பலம்

# தெய்வத் தீந்தமிழ்
# திருஅருட்பா




பாராயணப் பகுதி

ஜோதிக் கொடியே ஆனந்த
சொரூபக் கொடியே
ஜோதியுருப் பாதிக் கொடியே
ஜோதிவலப்பாகக் கொடியே
எனைஈன்ற ஆதிக் கொடியே
உலகுகட்டி ஆளும் கொடியே
சன்மார்க்க நீதிக் கொடியே 1.
சிவகாம நிமலக் கொடியே அருளுகவே.


அடுத்தவர் மயங்கி மதித்திட நினைத்தேன்
அடிக்கடி பொய்களே புனைந்தே
எடுத்தெடுத்து உரைத்தேன் எனக்குஎதிர் இலைஎன்று
இகழ்ந்தனன் அகங்கரித்து இருந்தேன்
கொடுத்தவர்தமையே மிக உபசரித்தேன்
கொடாதவர்தமை இகழ்ந்து உரைத்தேன்
நடுத்தயவு அறியேன் என்னினும் உனையே 2.
நம்பினேன் கைவிடேல் எனையே.

கற்குமுறை கற்றறியேன் கற்பன கற்றறிந்த
கருத்தர் திருக்கூட்டத்தில் களித்திருக்க அறியேன்
நிற்குநிலை நின்றறியேன் நின்றாரின் நடித்தேன்
நெடுங்காமப் பெருங்கடலை நீந்தும்வகை அறியேன்
சிற்குணமா மணிமன்றில் திருநடனம் புரியும்
திருவடிஎன் சென்னிமிசை சேர்க்க அறிவேனோ
இற்குணஞ்செய்து உழல்கின்றேன் எங்ஙனம்நான் புகுவேன் 3.
யார்க்கு உரைப்பேன் என்னசெய்வேன் ஏதும் அறிந்திலனே.

வாழிஎன் ஆண்டவன் வாழிஎங் கோன்அருள் வாய்மைஎன்றும்
வாழிஎம் மான்புகழ் வாழிஎன் நாதன் மலர்ப்பதங்கள்
வாழிமெய்ச் சுத்தசன்மார்க்க பெருநெறி மாண்புகொண்டு 4.
வாழிஇவ் வையமும் வானமும் மற்றவும் வாழியவே.



# தருமம் செய்ய விரும்பும் நெஞ்சங்களுக்கு ஒரு அன்பு வேண்டுகோள்



*அன்பர்கள் தங்கள் இல்லங்களில் நடைபெறும் திருமண நாள், பிறந்த நாள் போன்ற தினங்களிலும், இறந்தவர்களின் நினைவு நாள் போன்ற நாட்களிலும் திருவண்ணாமலையில் அமைந்துள்ள நமது வள்ளலார் சத்திய தருமச்சாலையில் அன்னதானம் செய்யலாம்.* ***தங்கள் நன்கொடைக்கு 80G பிரிவின்கீழ் வருமானவரி விலக்கு உண்டு.***

**<u>ஒரு நாளுக்கான அன்னதான நன்கொடை</u>**

| | |
|---|---|
| **காலை உணவிற்கு** | **– ரூ.2,500/–** |
| **மதிய உணவிற்கு** | **– ரூ.6,500/–** |
| **இரவு உணவிற்கு** | **– ரூ.3,500/–** |
| **பௌர்ணமி சிறப்பு அன்னதானத்திற்கு** | **– ரூ.4,000/–** |
| **பசு பராமரிப்பிற்கு (ஒரு பசுவிற்கு/ஒரு மாதத்திற்கு)** | **– ரூ.2,500/–** |
| **அணையா தீபத்திற்கு Oil (5 இடங்களுக்கு)** | **– 15 லிட்டர்** |

***தங்களது அன்னதான நாட்களை முன்கூட்டியே பதிவுசெய்துகொள்ளவும்***

<u>Please donate - Cheque / DD In favour of</u>

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

<u>Please donate through:</u> **HDFC Bank Ltd.,**

**Arutperunjothi Vallalar Charitable Trust, Thiruvannamalai**

**A/c No. : 08761450000048 IFSC Code: HDFC0000876**

**<u>Please send MO to:</u>**

*அருள்திரு* **பாபு சாது**

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்**

552/6A, **வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை,**

**கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை அஞ்சல்,**

**திருஅண்ணாமலை** – *606 604.*

*செல்:* +91 9443489849, +91 9942776351

*அன்னதானம் பற்றிய விபரங்களுக்கு:-*

**8012680865, 7502026565**

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி



# கோசாலை



அன்பு உள்ளங்களே!

உயிர்கள் மீது நாம் தயவு காட்டும்போதுதான் இறைவன் நம்மீது தயவு காட்டுவார். அதனால்தான் ஜீவகாருண்யமே கடவுள் வழிபாடு என்றார் வள்ளல் பெருந்தகை. அந்த வகையில் நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தில் பசுக்களை வைத்து பராமரித்து வருகின்றோம். தயவுள்ளம் கொண்டவர்கள் தங்களால் இயன்ற அளவு பொருளுதவி செய்து பசு பராமரிப்பிற்கு உதவலாம்.

பசு பராமரிப்பிற்கு உதவ விரும்புவோர்
கீழ்கண்ட அலைபேசி எண்ணை தொடர்பு கொள்ளவும்.

**தொடர்புக்கு: 8883590659, 7502026565**



## வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு

– சன்மார்க்க மாதஇதழ்

நமது திருவண்ணாமலை சன்மார்க்க சங்கத்தின் சார்பாக வெளியிடப்படுகின்ற "வள்ளலார் சன்மார்க்க ஞானமுரசு" மாதஇதழில்

- திருஅருட்பிரகாச வள்ளல் பெருமானார் மற்றும் ஞானியர்களின் ஆன்மீக உபதேசங்கள் அடங்கிய கட்டுரைகள்
- சன்மார்க்க நிகழ்வுகள்
- ஆன்மீக சந்தேகங்களுக்கான தெளிவுரைகள்
- யோக தியான பயிற்சி வகுப்புகள் ஆகியவற்றை அறிந்துகொள்வதற்கு சந்தாதாரராகி பயனடையுங்கள்.

உங்களின் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் சந்தாதாரராக்கி அறிவு தானம் செய்து பயனடையுங்கள். தொடர்புக்கு: **8012680865**

**ஆண்டு சந்தா ரூ.120/-** **5 வருட சந்தா ரூ.600/-**

Follow us on:

www.vallalarmission.org
www.fasebook.com/vallalarmission
vallalartrust@gmail.com
Group name: vallalarmission Cell no.:9942776351

Vallalar Sanmarga Gnanamurasu, Tamil Monthly April 2017, RNI TNTAM/2007/21626 DRO.R.C./C3/74857/05
PR No.TRL/11/2017-19 Posted at Tiruvannamalai on 16th of every month,
Published on 15th of every month, Printed pages 28 ( including 4 cover pages).

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

பொள்ளாச்சி அர்த்தநாரிப்பாளையத்தில்

# ஆன்மீக சத்சங்க விழா

அருட்சபை நடம்புரி அருட்பெருஞ்ஜோதி
தெருட்பெருஞ் சீர்சொலத் திகழ்வ சித்தியே.

நாள்: 30-04-2017, ஞாயிற்றுக் கிழமை

இடம்: அருட்பெருஞ்ஜோதி ஆலயம்,
பெருமாள் மலை அடிவாரம்,
அர்த்தநாரிபாளையம்,
பொள்ளாச்சி.



- அகவல் பாராயணம் - சன்மார்க்க அன்பர்கள்
- சிறப்பு சத்சங்கம் - சன்மார்க்க சாதுக்கள்
- கூட்டு பிரார்த்தனை
- ஜோதி தியானம்

போன்ற தெய்வீக நிகழ்வுகள் நடைபெறவுள்ளது

அனைவரும் அருள் பெற வருக! வருக!!

தொடர்புக்கு: +91 99651 50531, +91 7502026565

திரு/திருமதி

Book Post

Redirect to : அருள்திரு பாபு சாது
சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்
552/6A, வாயுலிங்கம் எதிரில், கிரிவலப்பாதை, கோசாலை கிராமம், அடிஅண்ணாமலை (Po),
திருஅண்ணாமலை – 606 604. Cell : 94434 89849, 99427 76351

சந்தா பற்றிய விபரங்களுக்கு அணுகவும்: +91 80126 80865